கலைஞரின் தொண்டும், விடா முயற்சியும் பிறருக்கு வழி காட்டத்தக்கவை!

(12.6.1967 அன்று திட்டக்குடியில் ஊராட்சி ஒன்றியத்தில் பொதுப்பணித் துறை அமைச்சர் மு.கருணாநிதி அவர்களின் உருவப்படத்தைத் திறந்து வைத்து தந்தை பெரியார் உரையாற்று கையில் குறிப்பிட்டதாவது)

நண்பர் திரு.கருணாநிதி அவர்களின் படத்தினை திறந்து வைப்பதில் எனக்கு பெருமகிழ்ச்சியே! நான் சமீபத்தில் ஒரு பள்ளிக் கட்டிட திறப்பு விழாவிற்காக ஒகளூர் சென்றிருந்தேன். அந்த விழாவிற்கு அமைச்சர் கோவிந்தசாமி அவர்களும் வந்திருந்தார்கள். அந்தப் பள்ளியின் நிர்வாகிகள் நான் பேசிக் கொண்டிருக்கும்போது இடையில் வந்து இரகசியமாக என் காதில் அண்ணாதுரை அவர்களின் படத்தினை திறந்து வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். நான், இதில் என்ன இரகசியம் வேண்டி இருக்கிறது. அண்ணாத்துரையின் படத்தினை திறந்துவைப்பது எனக்கு பெருமைதான் என்று கூறி அண்ணா படத்தைத் திறந்துவைத்தேன்.

தொண்டினைப் பாராட்டுவதற்கே திறப்பு

ஒருவருடைய படத்தினை திறப்பதென்றால் தொண்டினைப் பாராட்டுவதற்கே திறப்பு அவரைப் பற்றி அவரது தொண்டுகளைப் பற்றி சிலவற்றை சொல்ல வேண்டியது அவசியமும் சம்பிரதாயமும் ஆகும். **நண்பர் கருணாநிதி அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தில் உள்ள அறிவாளிகளில் முன்வரிசையில் உள்ள அறிவாளி ஆவார். தி.மு.கழகம் இந்த அளவு பரவுவதற்கு அவரது முயற்சியும் அறிவும்தான் காரணமாகும். அண்ணாதுரை கழகத்தின் தலைவராக இருந்தார். அவரும் கழகத்தைப் பரப்பினார் என்றாலும் கருணாநிதியின் உழைப்பும் முயற்சியும் இல்லாவிட்டால் கழகத்தின் செல்வாக்கு இந்த அளவு வளர்ந்து இருக்காது. இதை சொல்வதால் அண்ணாதுரையை நான் குறைத்துச் சொல்வதாகாது. அண்ணாதுரைக்கு பல வேலை பல கருத்து! அவர் ஒருவராலேயே கழகத்தை இந்த அளவு பரப்பி இருக்க முடியாது. கருணாநிதி அவர்கள் அண்ணாதுரைக்கு வலது கையாக இருந்து உதவி வந்திருக்கிறார்.**

அண்ணாதுரை கருணாநிதி என்னிடம் பயின்றவர்களே!

அண்ணாதுரை மிகவும் கெட்டிக்காரர்தான். ஆனால் கருணாநிதிக்கு இருக்கிற முன்யோசனை அவருக்குக் கிடையாது. நண்பர் இளம் வழுதி அவர்கள் சொன்னதுபோல பள்ளிக்கூடத்தை விட்டதும் என்னிடம் நேராக வந்தார். "எனக்கு பொதுத்தொண்டு செய்ய ஆவலாக இருக்கிறது" என்று கூறினார். நானும் ''என்னிடம் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். நீங்களும் இருங்கள் என்று சொன்னேன். எனது வீட்டிலேயே இருந்தார். 'குடிஅரசு' ஆபீஸிற்குப் போய் வந்து கொண்டிருந்தார். பிறகு எழுதவும், மேடையில் பேசவும் ஆரம்பித்தார். நல்ல கருத்தாளர் ஆனார்: எழுச்சியுள்ளவரானார். வரவர நல்ல கருத்து பிடிபட்டது. பிரச்

சாரக் கலையும் பிடிபட்டது.

ஒரு பொதுக்கூட்டத்தில் நானும் இருக்கும்போது என்னைவிட அதிக கடுமையாகப் பேசிவிட்டார். நான் அதற்கு அவரைக் கண்டித்தேன். அதை அவர் மனதிலேயே வைத்துக் கொண்டிருந்தார். ஒரு சந்தர்ப்பம் வந்தபோது என்னையே கண்டித்துப் பேசிவிட்டார். அந்தச் சம்பவம் உங்களுக்கு வேடிக்கையாக இருக்கும் என்பதற்காக சொல்கிறேன்.

பிரச்சாரப் பயிற்சிப் பள்ளி நடத்தியது

நான் வருடம் தவறாமல் பிரச்சாரப் பயிற்சிப் பள்ளி நடத்துவது வழக்கம். அந்த வருடம் தஞ்சாவூர் ஜில்லாவில் நடத்தலாம் என்று ஆசைப்பட்டேன். திருவாரூரில் உள்ள நமது கழகத்தோழர் யாகூப் அவர்கள் தஞ்சாவூர் ஜில்லாவில் உள்ள மாவூர் திருஆர்.எஸ்.சர்மா அவர்களிடம் போய் உங்கள் தோட்டத்தில் பயிற்சிப் பள்ளி நடத்திக் கொள்வதற்கு 20 நாட்களுக்கு அனுமதி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டாராம். அவரும் மகிழ்ச்சியோடு ஒப்புக்கொண்டு தாராளமாக நடத்திக் கொள்ளுங்கள் என்று கூறியதும் திரு. யாகூப் அவர்கள் "நாங்கள் சமையல் எந்த இடத்தில் வைத்துக்கொள்வது? குறைந்தது 25 பேருக்கு சமையலாக வேண்டும். அதோடு அடிக்கடி வெளியூரிலிருந்து தோழர்கள் வந்து போவார்கள். அவர்களுக்கெல்லாம் இங்கு சாப்பாடு போடவேண்டி இருக்கும். சமையல் இடம் வசதியாக இருந்தால் நல்லது" என்று கூறி இருக்கிறார். உடனே திரு.சர்மா அவர்கள், "எத்தனை பேராக இருந்தால் என்ன? எல்லோருக்கும் நமது பங்களாவில்தான் சமையல், சாப்பாடு எல்லாம்" என்று கூறிவிட்டார். இதை வந்து திரு.யாகூப் என்னிடம் சொன்னார். நானும், 'சரி' என்று ஒத்துக்கொண்டு அங்கேயே பயிற்சி முகாமை ஆரம்பித்து நடத்தினேன். அதற்குள் கருணாநிதிக்கு இரண்டு மூன்று பேர் சேர்ந்துவிட்டனர்.

கருத்து வேற்றுமை இருந்தும் குறைகூறவில்லை

ஒரு பொது நிகழ்ச்சியில் அவர் பேச சந்தர்ப்பம் கிடைத்தபோது என்னை "தலைவர், தலைவர் என்று சொன்னோம். அவரே போய் பார்ப்பான் வீட்டிலே உட்கார்ந்துகொண்டு சாப்பிடுகிறார்" என்று என்னையே கண்டித்துப் பேசினார்.

அதிலிருந்து கருத்து வேற்றுமை ஆரம்பித்து அவருக்கும் குறிப்பிடத்தக்க பலம் வந்ததும், நானும் கண்டிப்போடு கடுமையாக நடந்துகொள்ள ஆரம்பித்ததும் அவர்கள் விலகவே செய்து விட்டார்கள். விலகினாலும் அண்ணாதுரையின் கெட்டிக்காரத்தனம் என்னைப் பற்றி ஒரு சிறு குறைகூட கூறாமல் "அவர்தான் எங்கள் தலைவர். அவரது கொள்கைதான் எங்களுக்கும்" என்று சொல்லி நல்ல அளவு மக்களிடையே செல்வாக்குப் பெற்று விட்டனர்.

அண்ணாதுரையாவது, கருணாநிதியாவது என்னைக் குறிப்பிட்டு என் காரியத்தைக் குறிப்பிட்டு இதுவரை ஒரு சிறு குறைகூட கூறியது கிடையாது. இன்றைக்கும் அண்ணாதுரை "என் தலைவர் பெரியார்தான்" என்று கூறுகிறார்.

கருணாநிதியின் தொண்டும் முயற்சியும்!

அதேபோல் கருணாநிதியும் என்னை எங்கு கண்டாலும் செல்லப்பிள்ளை மாதிரி நெருங்கி மிக உரிமையோடு உரையாடுவார். இன்னமும் தி.மு.க.வுக்கு கருணாநிதியின் தொண்டு பயன்படத் தக்கதாகும். அவரது தொண்டும் முயற்சியும் பிறர் கடைபிடிக்க வேண்டியதாகும். அவரது படத்தை திறந்து வைப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

'விடுதலை' 20.6.1967

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா!

நெல்லை மத்திய மாவட்டத்தில் திருவுருவச்சிலை அமைக்க முடிவு!

மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம்! டி.பி.எம்.மைதீன்கான் அறிவிப்பு

நெல்லை.மே29-

நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. செயல் வீரர்கள் கூட்டம் நெல்லை சந்திப்பு ஆர்.கே.வி.திருமண மஹாலில் வைத்து நெல்லை மத்திய மாவட்ட அவை தலைவர் வி.கே.முருகன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் முன்னாள் அமைச்சர் டி.பி.எம்.மைதீன் கான் பங்கேற்று முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்த நாள் நிகழ்வை மிகசிறப்பாக கொண்டாட வேண்டும்.என கூறினார். நெல்லை நகரின் மைய பகுதியில் இடம் தேர்வு செய்யப்பட்டு முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் முழு உருவ வெண்கல சிலை அமைக்க வேண்டும்.என்றும் இந்த கூட்டத்தில் தீர்மானிக்கப் பட்டது.

நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. செயல்வீரர்கள் கூட்டம் நெல்லை சந்திப்பு ஆர்.கே.வி.திருமண மஹாலில் மாவட்ட அவை தலைவர் பி.கே.முருகன் தலைமையில் மாநில மகளிர் அணி செயலாளர் பாளை சட்டமன்ற தொகுதி பார்வையாளர் ஹெலன் டேவிட்சன், மாநில நெசவாளர் அணி துணை செயலாளர்,நெல்லை சட்டமன்ற தொகுதி பார்வையாளர் வசந்தம் ஜெயக்குமார் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. நெல்லை மாநகரச் செயலாளர் சு.சுப்பிரமணியன் வரவேற்புரையாற்றினார்.மாவட்ட துணை செயலாளர் எஸ்.வி.சுரேஷ் தீர்மானங்களை வாசித்தார்.மாநில வர்த்தக அணி இணை செயலாளர் மாலைராஜா நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார்.

பின்னர் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் முன்னாள் அமைச்சர் டி.பி.எம்.மைதீன்கான் ஆலோசனைகளை வழங்கி பேசினார்.

நிகழ்வில் பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல்வ காப், தலைமை தீர்மான குழு உறுப்பினர் சுப.சீதாராமன்,மாநில நெசவாளர் அணி செயலாளர் பெருமாள், மாநில மகளிர் தொண்டரணி துணை செயலாளர் விஜிலா சத்யானந்த்,தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஏ.எல்.எஸ்.லெட்சுமணன்,பேச்சிபாண்டியன், மாவட்ட துணை செயலாளர் தர்மன், மாவட்ட பொருளாளர் வண்ணை சேகர்,பொதுக்குழு உறுப்பினர்கள் மேயர் சரவணன்,துணை மேயர் ராஜ், நடராஜன்,ராஜேஸ்வரி,மாநகர நிர்வாகிகள் அப்துல்கையூம், சுதாமூர்த்தி,மூளிக்குளம் பிரபு, அண்ணாமலை,பகுதி செயலாளர்கள் சுப்பிரமணியன் (தச்சை)துபை சாகுல் (மேலப்பாளையம்)அன்டன்செல்லதுரை (பாளை)நமச்சிவாயம் (நெல்லை) ஒன்றிய செயலாளர்கள் அருள்மணி, மாரியப்

பன், அன்பழகன்,முருகன், பேரூர் செயலாளர்கள் செல்வபாபு,பேச்சிமுத்து,மாநகர இளைஞரணி அமைப்பாளர் கருப்பு சாமி கோட்டையப்பன்,மத்திய மாவட்ட வழக்கறிஞர் அணிஅமைப்பாளர் தினேஷ், சங்கரலிங்கம்,நவ்ஷாத், உட்பட ஒன்றிய கழக, பகுதி கழக,பேரூர் கழக,கிளை கழக, உள்ளாட்சி பிரதிநிதிகள்,கழக முன்னோடி கள்,கழகத்தினர் திரளாக கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு.

நெல்லை மத்திய மாவட்ட கழக பொறுப்பாளராக முன்னாள் அமைச்சர் டி.பி.எம்.மைதீன்கான் அவர்களை நியமனம் செய்த கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும் கழக பொது செயலாளர் அவர்களுக்கும், கழக பொருளாளர் அவர்களுக்கும், மாநில இளைஞரணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் அவர்களுக்கும், இக்கூட்டம் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

இந்திய திருநாட்டின் குடியரசு தலைவர்களையும், துணை குடியரசு தகவர்களையும், பிரதமர்களையும் பல முறை உருவாக்கி தமிழ்நாட்டின் அரசியல் தலைவராக மட்டுமல்ல இந்திய அரசியலின் திசையை தீர்மானிப்பவராக திகழ்ந்த முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞருடைய நூற்றாண்டு விழாவை தலைமை கழக அறிவிப்புக்கு இணங்க நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் மாநகர கழக,ஒன்றிய கழக பகுதிக் கழக,பேரூர் கழக,வட்டக் கழக,ஊராட்சிக் கழக பகுதிகளில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் ஜூன் 3ஆம் தேதி முதல் ஓராண்டுக்கு அனைத்து தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில் நலத்திட்ட உதவிகள் வழங்கியும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் ஐந்து முறை முதலமைச்சராக இருந்து தமிழ்நாடு மக்களுக்கு ஆற்றிய பணிகளையும் கலைஞர் வழியில் ஆட்சி செய்யும் கழகத் தலைவர் திராவிட மாடல் முதலமைச்சர் தளபதியாரின் ஈடில்லா இரண்டு ஆண்டு கால ஆட்சியின் சாதனைகளையும் மக்களிடம் கொண்டு சேர்க்கின்ற பணியை சிறப்பாக செய்திட மாநகர,ஒன்றிய, பகுதி, பேரூர்,வட்டகழக செயலாளர்களை கேட்டுக் கொள்வதோடு நிகழ்ச்சியை சிறப்பாக நடத்திட இக்கூட்டம் ஒரு மனதாக தீர்மானிக்கிறது.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நெல்லை நகரின் மையப்பகுதியான அரவிந்த் கண் மருத்துவமனை அருகில் கழகத்திற்கு சொந்தமான இடத்தின் முகப்பு பகுதியில் தலைமை கழக அனுமதி பெற்று முத்தமிழ் அறிஞர் கலைஞரின் முழு உருவ வெண் கலசிலை அமைப்பது என இக்கூட்டம் ஒரு மனதாக தீர்மானிக்கிறது.

நெல்லை மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட நெல்லை மற்றும் பாளையங்கோட்டை சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட மாநகர,ஒன்றிய, பகுதி, பேரூர், வட்டக் கழகம் மற்றும் ஊராட்சி பகுதியில் கழக உறுப்பினர் சேர்க்கும் பணியை தீவிர படுத்திடவும், நெல்லை சட்டமன்ற தொகுதி பார்வையாளர் வசந்தம் ஜெயக்குமார், பாளையங்கோட்டை சட்டமன்ற தொகுதி பார்வையாளர் ஹெலன் டேவிட்சன், ஆகியோரின் ஆலோசனைப்படி மேற்கண்ட பணிகள் துரிதமாக முடித்து மாவட்ட கழகத்தில் ஒப்படைக்க மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வட்டக் கழக செயலாளர்களை கேட்டுக் கொள்வதோடு உறுப்பினர் படிவம் தேவைப் படுபவர் மாவட்ட கழகத்தில் பெற்றுக் கொள்ளவும் வேண்டிக் கொள்கிறது. இவ்வாறு தீர்மானங்கள் நிறை வேற்றப் பட்டுள்ளன.

சென்னை வடகிழக்கு மாவட்டம்

திருவொற்றியூர் கிழக்குப் பகுதி வட்டச் செயலாளர்கள் கூட்டம்!

பகுதிச் செயலாளர் தி.மு.தனியரசு அறிக்கை!

சென்னை, மே 29 -

சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் கிழக்கு பகுதி வட்ட செயலாளர்கள் அவசர ஆலோசனைக்கூட்டம் நாளை நடைபெறுகிறது என பகுதிச் செயலாளர் தி.மு.தனியரசு அறிவித்துள்ளார்.

திருவொற்றியூர் கிழக்குப் பகுதிச் செயலாளரும் 1-வது மண்டலக் குழுத் தலைவருமான தி.மு.தனியரசு விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சென்னை வடகிழக்கு மாவட்டம் திரு வொற்றியூர் கிழக்கு பகுதி வட்ட செயலாளர்கள் அவசர ஆலோசனைக்கூட்டம் சென்னை வடகிழக்கு மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. ஆலோசனையின்படி நாளை (30.5..2023 செவ்வாய்க்கிழமை) மாலை 6 மணிக்கு

எண் 58 சன்னதி தெருவில் அமைந்துள்ள பகுதிக் கழக அலுவலகத்தில்

பகுதி அவைத் தலைவர் ஆர்.சி.ஆசைதம்பி தலைமையில் நடைபெறுகிறது.

இதில் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர், மாநில நிர்வாகிகள்,

மாவட்ட நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள் , செயற்குழு உறுப்பினர்கள், பகுதி கழக நிர்வாகிகள், வட்ட செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட, பகுதி, வட்ட அணியின் நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்

பொருள் : முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு தொடக்க விழா மற்றும்

கழக ஆக்க பணிகள்.

இவ்வாறு பகுதிச் செயலாளரும் 1-வது மண்டலக் குழுத் தலைவருமான தி.மு.தனியரசு கேட்டுக் கொண்டுள்ளார்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை

நாகை மாவட்டம் முழுவதும் சிறப்பாக கொண்டாடிட வேண்டும்!

மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் அறிக்கை!

நாகை, மே 29-

நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்சசிக் கழகத் தலைவர் என்.கௌதமன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது.

தமிழ்நாடு சட்ட மன்ற தேர்தலில் 13 முறை போட்டியிட்டு 13 முறையும் வெற்றிப் பெற்று 19 ஆண்டு காலம் 5 முறை தமிழக முதல்வர், 50 ஆண்டுகாலம் கழகத் தலைவர், பல இந்திய குடியரசுத் தலைவர்கள், பிரதமர்களை தேர்ந்து எடுத்து, இந்திய துணை கண்டத்திற்கே வழிகாட்டியாக, 60 ஆண்டுகாலம் வரைப்படத்துறை, பத்திரிக்கைத் துறை, இலக்கியம், நாடகம், சொற்பொழிவு என தொட்ட அனைத்து துறைகளிலும் சிகரமாக உயர்ந்து நின்ற முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் தனது ஆட்சி காலத்தில் தமிழ் மொழியை செம்மொழியாக்கி, காவிரி நடுவர் மன்றம் அமைத்தும், தனியார் பேருந்துகளை அரசுடமையாக்கி அரசு போக்குவரத்து கழகத்தை உருவாக்கியவர்.

நமது நெஞ்சமெல்லாம் நிறைந்து வாழ்கின்ற முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளை கடந்த 16.5.2023 அன்று நாகை மாவட்டக் கழக செயற்குழு கூட்டத்தில் நிறைவேற்றப் பட்ட தீர்மானத்தின் படி வரும் ஜுன் 3ம் தேதி அன்று மற்றும் 3.6.2023 முதல் ஓராண்டுக்கு கலைஞர் நூற்றாண்டு விழாவை நாகை மாவட்டத்தில் ஒன்றிய, நகர, பேரூர் பகுதியில் உள்ள அனைத்து கிளைகள், வார்டுகள் தோறும் கழக கொடி ஏற்றி, இனிப்புகள் வழங்கியும், மாணவ, மாணவிகளுக்கு நோட்டு, பேனா எழுதுப்பொருட்களை வழங்கியும், ஏழை எளியவர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கியும், முதியோர், ஆதரவற்றோர் இல்லங்களில் உள்ளவர்களுக்கு உணவு, உடை வழங்கியும், மரக்கன்றுகள் நட்டும், வழங்கியும், இரத்ததான முகாம், மருத்துவ முகாம்கள் நடத்தியும், பொதுக்கூட்டம், தெருமுனை பிரச்சார கூட்டம் ஆகியவற்றை நடத்தி சிறப்பாக கொண்டாடுவது என்றும், இந்நிகழ்ச்சியில் ஒன்றிய, நகர, பேரூர் பகுதியில் உள்ள மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், ஒன்றியக் குழு தலைவர்கள், மாவட்ட ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், நகர் மன்ற தலைவர்கள், பேரூராட்சி மன்ற தலைவர்கள், ஒன்றியக் குழு உறுப்பினர்கள், நகர் மன்ற உறுப்பினர்கள், பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், உறுப்பினர்கள், கழக மூத்த முன்னோடிகள், கழகத்தினர், கிளை, வார்டு கழக செயலாளர்கள், நிர்வாகிகள் அனைவரும் தங்கள் பகுதியில் நடைபெறும் கலைஞர் பிறந்த நாள், நூற்றாண்டு விழா நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு விழாவை சிறப்பாக கொண்டாடிட வேண்டும். மேலும் ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள் தங்கள் பகுதியில் உள்ள கிளை, வார்டுக் கழகச் செயலாளருக்கு கலைஞர் பிறந்த நாள் மற்றும் நூற்றாண்டு விழா அனைத்து பகு யிலும் சிறப்பாக கொண்டாடிட உரிய ஆலோசனைகளை வழங்கிட வேண்டும் இவ்வாறு அந்த அறிக்கையில் நாகை மாவட்டக் கழக செயலாளர் என். கௌதமன் கூறியுள்ளார்.

பல்லாவரம் வடக்கு பகுதி திமுக சார்பாக செயல் வீரர்கள் கூட்டம் பழைய பல்லாவரத்தில் அமைந்துள்ள அண்ணா திடலில் நடைபெற்ற கூட்டத்தில் கழகப் பொருளாளர் திமுக நாடாளுமன்ற குழு தலைவர் டி. ஆர். பாலு, காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளர் சிறு குறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ அன்பரசன் ஆகியோர் கலந்து கொண்டு வருகின்ற நாடாளுமன்றத் தேர்தல் பணியாற்றுவது குறித்து சிறப்புரை ஆற்றினார்கள், பகுதி கழகச் செயலாளர் தாம்பரம் மாநகராட்சி மண்டல குழு தலைவர் இ. ஜோசப் அண்ணாதுரை வரவேற்றுப்பேசினார். இக் கூட்டத்தில் மாவட்ட கழக துணைச் செயலாளர் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினருமான இ.கருணாநிதி, தாம்பரம் மாநகரச் செயலாளர் தாம்பரம் சட்டமன்ற உறுப்பினருமான எஸ். ஆர். ராஜா, தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமார், துணை மேயர் கோ. காமராஜ், பகுதி கழகச் செயலாளர் வே. கருணாநிதி, த. ஜெயக்குமார், ஏ.கே. கருணாகரன், பொதுக்குழு உறுப்பினர் மு.ரஞ்சன் , பகுதி கழக நிர்வாகிகள் வட்டக் கழக செயலாளர் மாமன்ற உறுப்பினர் கலந்து கொண்டனர்.

கன்னியாகுமரி மேற்கு மாவட்டத்தில் ஒன்றிய - நகர - பேரூர் வாரியாக

இளைஞர் அணி சார்பில் சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!

மாவட்டச் செயலாளர் அமைச்சர் மனோ தங்கராஜ் அறிவிப்பு

பத்தாண்டு கால அவல ஆட்சியால் இருண்ட தமிழ்நாட்டின் முதல்வராக பொறுப்பேற்று, சீர்கேடுகளைக் களைந்து சிறப்பாக நிர்வகித்து, கொரோனா கால நெருக்கடிகளை திறம்பட கையாண்டு மக்களின் இன்னுயிரை காத்து, குழந்தைகளுக்கு ஊட்டசத்தை உறுதிசெய்யும் திட்டம் தந்து, மகளிர்க்கு கட்டணமில்லா பேருந்து திட்டத்தை நடைமுறைபடுத்தி, உரிமை தொகை திட்டத்திற்கு உத்தரவிட்டு, மாணவ மாணவிகள் கல்வி பெறுதலை மேம்படுத்த நான் முதல்வன் புதுமை பெண் திட்டங்களை தந்து, இன்னுயிர்காக்கும் 48 மணிநேரம் மூலம் குடும்பநலன் காத்து, மாநில சுயாட்சியை வலியுறுத்தி, அரசு வேலை தமிழர்க்கே என்பதை நிலைநிறுத்தி, 1 டிரிலியன் டாலர் பொருளாதாரத்தை நோக்கி தமிழ்நாட்டை வழிநடத்தி செல்லும் பார் வியக்கும் செயலாற்றல் வீரர், கழக தலைவர் தமிழக முதல்வர் தளபதி அவர்களின் திராவிட மாடல் ஆட்சியின் இரண்டாண்டு சாதனையை விளக்கும் வகையில் இளைஞரணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுதுறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பிற்கு இணங்க கன்னியாகுமரி மேற்கு மாவட்டத்தில் இளைஞரணி சார்பில் ஒன்றியம் நகரம் பேரூர் வாரியாக பின்வரும் இடங்களில் திராவிட மாடல் ஆட்சியின் இரண்டாண்டு சாதனை விளக்க தெருமுனை கூட்டம் நடைபெறும் என்பதை தெரிவித்து கொள்கிறேன்..

நாள் : 29.05.2023 திங்கள்கிழமை

மேல்புறம் வடக்கு ஒன்றியம்	மாலை 5 மணி மேல்புறம் சந்திப்பு	பிரவீன், சுபாஷ் சந்திரபோஸ்
குழித்துறை நகரம்	மாலை 5 மணி கழுவன்திட்டை	என்.ஆர்.மணி, தினகர்
கொல்லங்கோடு நகரம்	மாலை 5 மணி கலிங்கராஜபுரம்	சௌந்தர்ராஜ், ராஜபோஸ்
கிள்ளியூர் வடக்கு ஒன்றியம்	மாலை 5 மணி நல்லூர் முளங்குழி	சிலம்பை டென்னிசன் சுரேஷ் குமார்

நாள் : 30.05.2023 செவ்வாய்க்கிழமை

முஞ்சிறை கிழக்கு ஒன்றியம்	மாலை 5 மணி ஆலன்கோடு வாவறை ஊராட்சி	வழக்கறிஞர் பிரவீன் வீர வர்க்கீஸ்
மேல்புறம் தெற்கு ஒன்றியம்	மாலை 5 மணி பாகோடு ஞாறாம்விளை	சிலம்பை டென்னிசன் ராஜபோஸ்
தக்கலை வடக்கு ஒன்றியம்	மாலை 5 மணி கோதநல்லூர் ஈத்தவிளை	சௌந்தர்ராஜ், இராஜ்
திருவட்டார் வடக்கு ஒன்றியம்	மாலை 5 மணி கடம்பம் மூடு, பேச்சிப்பாறை	என்.ஆர்..மணி சுரேஷ் குமார்

நாள் : 31.05.2023 புதன்கிழமை

கிள்ளியூர் தெற்கு ஒன்றியம்	மாலை 5 மணி பாலபள்ளம்	சௌந்தர்ராஜ் , இராஜ்
முஞ்சிறை மேற்கு ஒன்றியம்	மாலை 5 மணி சூழால்	என்.ஆர்.மணி சுபாஸ் சந்திரபோஸ்
திருவட்டார் தெற்கு ஒன்றியம்	மாலை 5 மணி குமரன்குடி மங்காடு	சிலம்பை டென்னிசன் சுரேஷ் குமார்
பத்மனாபபுரம் நகரம்	மாலை 5 மணி புலியூர்குறிச்சி	பிரவீன், வீர வர்க்கீஸ்

நாள் : 01.06.2023 வியாழக்கிழமை

மேல்புறம் வடக்கு ஒன்றியம்	மாலை 5 மணி கண்ணுமாமூடு	சிலம்பை டென்னிசன்
குழித்துறை நகரம்	மாலை 5 மணி குழித்துறை	பிரவீன், ராஜபோஸ்
கிள்ளியூர் வடக்கு ஒன்றியம்	மாலை 5 மணி உண்ணாமலை கடை சந்திப்பு	சௌந்தர்ராஜ், சுபாஸ் சந்திரபோஸ்
கொல்லங்கோடு நகரம்	மாலை 5 மணி கச்சேரி நடை	பிரவீன், இராஜ்

அமைச்சர் மனோ தங்கராஜ்
செயலாளர், கன்னியாகுமரி மேற்கு மாவட்ட தி.மு.க.